[1980 பிப்ரவரி 11

இணைப்பு V.

[183 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 212-க்கான விடையைக் காண்க].

திரு. என். கிட்டப்பா, சட்டமன்ற உறுப்பினர் விடுத்துள்ள வினா 8910 (உடுக்குறியிட்டது)க்கான பதிலின் இணைப்பு.

அரசு குறிப்பாணை எண். 41668/ந.7/78.15, நாள் 18.4.1978, நகல்

பொருள்: சொத்துவரி—சென்னை மதுரை மாநகராட்சிகள் 1978–79-க்கான பொது வரித் திருத்தம் மதிப்பீடு இறுதியாக்கல்—அறிவுரைகள்—வெளியிடப்பட்டது.

கடந்த ஆண்டிலும் நடப்பு ஆண்டிலும் சென்னை மாநகராட்சியினால் பொது வரித் திருத்தத்திற்காக செய்யும் மதிப்பீட்டு விதிதம் பற்றி அரசுக்கு புகார்கள் வரப்பெற்றன. இது குறித்து சமீபத்தில் உயர்நீதிமன்றமும் ஒரு தீர்ப்பு வழங்கியுள்ளது. வரி விதிப்பதற்காக மதிப்பீடு செய்வது பற்றியும் உயர்நீதி மன்றத்தின் பூர்ப்பினால் ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றியும் அரசு ஆய்ந்து வருகிறது அரசு ஆணை பிறப்பிக்கும் வரை, வரி திருத்தங்களை நடைமுறைப் படுத்துவதற்கு முன் உள்ள வரிகளையே வசூலிக்கும்படி சென்னை, மதுரை மாகநராட்சிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே அதிகமாக வசூல் செய்யப்பட்ட தொகை இருப்பின் அவைகளை அடுத்த அரையாண்டு காலத்திற்கு சரி செய்து கொள்ளப்படலாம். அரசின் அறிவுரைப்படி கடந்த காலங்களுக்கான வரி பாக்கி இருப்பின் அவைகளையும் பின்வரும் அரை ஆண்டுகளில் வசூல் செய்து கொள்ளலாம். ஆணையர்கள் மேற்கூறியவைகளை விரிவான பொது அறிவிப்பு செய்யலாம்.

இணைப்பு VI.

[187 ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண். 220-க்கான விடையைக் காண்க].

காசநோய் மற்றும் மார்பு நோய் மருத்துவ நிலையம் சென்னையிலும் அதன் சுற்றுப்புறத்திலும் உள்ள அரசுத் துறைகள் மற்றும் தனியார் துறைகள் தொழிற்சாலைப் பணியாளர்களுக்கும் மார்பு பரிசோதனைகள் செய்தது. இதுவரை நான்கு அரசுத்துறை நிறுவனங்களுக்கும், ஐந்து தனியார் துறை நிறுவனங்களுக்கும் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கு உள்பட்ட நிறுவனங்கள் :

அரசுத் துறை.

1. பால்வள நிறுவனம்.
2. எண்ணூர் அனல் மின்திட்டம்.
3. கனரக ஊர்தி தொழிற்சாலை, ஆவடி.
4. பேசின் பிரிட்ஜ் மின் நிலையம்.

தனியார் துறை.

1. டி.வி.எஸ். மோட்டார் தொழிற்சாலை.
2. பிரிட்டானியா பிஸ்கட் தொழிற்சாலை.
3. ஓல்டாஸ் நிறுவனம்.
4. கார்பராண்டம் யூனிவர்சல் நிறுவனம்.
5. மெட்டல் காஸ்ட் நிறுவனம்.

கண்டுபிடிப்புகள்.

இதிட்டத்தின் கீழ் மொத்தத்தில் 5,922 பணியாளர்கள் அரசுத்துறை நிறுவனங்களிலிருந்து பரிசோதிக்கப்பட்டனர். இவர்களில் நுண்கதில் புகைப்படம் மூலம் 2.0% லிருந்து 7.9% வரை நோயுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் தொற்றும் தன்மையுள்ள நோயாளிகள் (சளியில் கிருமிகள் வெளிப்படுத்துவோர்) 1.2% லிருந்து 1.6% ஆக கணிக்கப் பட்டுள்ளது.

இதேபோல் தனியார் துறையில் 3,101 பேர்களைப் பரி சோதித்ததில் நுண்கதில் புகைப்படம் மூலம் காணப்பட்ட நோயாளிகளின் விகிதம் 1.2% லிருந்து 4.8% வரையிலும், தொற்றும் தன்மையுள்ள நோயாளிகளின் விகிதம் 0.4 லிருந்து 2.1% வரையிலுமாகக் காணப்பட்டது.